[9th September 1960

Sevamandir

*576 *Q*.—**Sri A. VEDARATHNAM**: கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) 12–8–1960-ல் சட்ட சபையில் 412-ம் எண் கேள்விக்களித்த பதிலையொட்டி மேஜை மீது வைக்கப்பட்ட எட்டில் 10-வது அயிட்டத்தில் கண்ட சென்னை இண்டஸ்ட்ரியல் டிரெயினிங் சென்டர் சேவா மந்திரில் என்னென்ன தொழில் கல்வி போதிக்கப்பட்டு வருகின்றன ?

(ஆ) இதற்காக அரசாங்கம் புரிந்து வரும் உதவி என்ன ?

The Hon. Sri R. VENKATARAMAN: (*a*) Training in the following trades are imparted in the Industrial Training Centre, Stree Seva Mandir, Madras :—

(i) Bleaching, dyeing and printing.

(ii) Book Binding.

(iii) Cutting and Tailoring.

(iv) Embroidery and needle work.

(v) Hand weaving.

(vi) Knitting with hand and machine.

(*b*) The Principal has been authorised to draw a sum of Rs. 5 per mensem per trainee as training grant towards the cost of raw materials supplied for training, rent, rates and taxes, electric charges, etc. Wherever necessary, expenditure is sanctioned towards the purchase of additional equipment required for the development of the Centre.

Sri A. VEDARATHNAM: இந்த ஸ்த்ரீசேவா மந்திரில் எவ்வளவு பேர்களுக்குப் பயிற்சி கொடுக்கப்படுகிறது ? இந்தப் பயிற்சிக்குப் பிறகு ஏதேனும் பரீட்சை உண்டா ? பரீட்சையில் தேரியவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறதா ?

The Hon. Sri R. VENKATARAMAN: இந்த மூன்று தகவல்களும் என்னிடம் இல்லை. தனியாகக் கேள்வி கேட்டால் தகவல் கொடுக்கிறேன்.

Handicrafts

*577. *Q*—**Sri P. G. MANICKAM**: கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) 3-வது ஐந்தாண்டுத் திட்டத்திலே சென்னை ராஜ்யத்தில் என்னென்ன கைத்தொழில்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று "All India Handicrafts Board" க்கு தெரிவிக்கப்பட்டிருக்கின்றது ?

(ஆ) எந்தெந்த தொழில்களை ஆரம்பிப்பது பற்றி இப்போர்டு மூலம் ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகின்றது ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: (*a*) & (*b*) The schemes for the development of Handicrafts under the Third Five-Year Plan are under consideration and they have not yet been finalised. The All-India Handicrafts Board will examine the schemes only after the Plan has been finalised and the details of the schemes have been furnished to it.